# சென்னையில் பிரம்மாண்ட மாரத்தான்

## மாற்றுத் திறனாளிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



▲ சென்னையில் நேற்று நடத்தப்பட்ட பிரம்மாண்ட மாரத்தான் போட்டியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

■ சென்னை

சென்னையில் நேற்று நடந்த பிரம்மாண்டமான மாரத்தான் போட்டியில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்றனர்.

சென்னை ரன்னர்ஸ் அமைப்பு, 2006-ம் ஆண்டு முதல் மாரத்தான் போட்டிகளை நடத்தி வருகிறது. உடல் ஆரோக்கியம், சமூகப் பணி என பல்வேறு விஷயங்களை முன்னிலைப்படுத்தி மாரத்தான் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மெட்ரோ ரயில் நிறுவனமும், சென்னை ரன்னர்ஸ் அமைப்பினரும் இணைந்து சென்னையில் நேற்று மாரத்தான் போட்டியை நடத்தின. இப்போட்டியை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். காவல்துறை கூடுதல் இயக்குநர் கி.ஜெயந்த் முரளி, ஸ்கெச்சர் நிறுவனத்தின் தெற்கு ஆசியப் பிரிவு தலைமை செயல் அதிகாரி ராஹுல் விரா, சென்னை ரன்னர்ஸ் நிர்வாகி வி.பி. செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

10 கி.மீ, 21 கி.மீ, 32 கி.மீ, 42 கி.மீ என 4 பிரிவுகளில் மாரத்தான் போட்டிகள் நடைபெற்றன. 10 கி.மீ. பிரிவில், வீல் சேர் பயன்படுத்தி 100-க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளும் கலந்து கொண்டனர். இந்த பிரம்மாண்ட மாரத்தான் போட்டியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். கல்வி உதவித் தொகை, மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு உதவி, மற்றும் பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள கழுபதூர் ஏரியை தூர்வாரி சீரமைக்க நிதி திரட்டும் வகையில் இந்த மாரத்தான் போட்டிகள் நடைபெற்றன.

42.2 கி.மீ தூரத்துக்கான முழு நீள மாரத்தானில் ஆண்கள் பிரிவில் கென்யாவை சேர்ந்த பிளெக்ஸ் ரோப், பெண்கள் பிரிவில் ராசிபுரத்தை சேர்ந்த கே.சுகுணா ஆகியோர் வெற்றி பெற்றனர். மொத்தம் 4 பிரிவுகளில் நடைபெற்ற மாரத்தானில் முதல், இரண்டாம், மூன்றாம் இடம் பிடித்து வெற்றி பெற்ற தலா 3 பேர் என 24 பேருக்கு பரிசுகள் அளிக்கப்பட்டன. மொத்தம் ரூ.25 லட்சம் பரிசுத் தொகை பிரித்து அளிக்கப்பட்டது.

மாரத்தான் போட்டிகளில் பங்கேற்பவர்களின் வசதிக்காக நேற்று அதிகாலை 3 மணி முதல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. இதேபோல், அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் இலவசமாக வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்பட்டது.